

முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் புதுப்பாளையம் விஸ்வநாதன் அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர். சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்.சிவ.சக்திவேல் , பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி , பொதுக்குழு உறுப்பினர் பக்தவத்சலம், சடகோபன், ஏழுமலை , சுந்தர் தகவல் தொழில்நுட்ப அணி கிருஷ்ணராஜ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### இந்திய அணு ஆற்றல் திட்டத்தின் தூணாக விளங்கிய

# முனைவர் சீனிவாசன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 21-

இந்திய அணு ஆற்றல் திட்டத்தின் தூணாக விளங்கிய சீனிவாசன் அவர்களின் மறைவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்திய அணு ஆற்றல் திட்டத்தின் தூணாக விளங்கிய முனைவர் சீனிவாசன் அவர்களின் மறைவினால் வருந்துகிறோம்.

சீனிவாசன் அவர்களின் பயணம் இந்திய அணுத் திட்டத்தின் தந்தையாகப் போற்றப்படும் முனைவர் ஹோமி ஜே. பாபா அவர்களுடன் இணைந்து இந்தியாவின் முதல் அணு உலையைக் கட்டமைப்பதில் தொடங்கியது.

பின்பு, 18 அணு ஆற்றல் அலகுகளைக் கட்டமைப்பதில் தலைமைப் பங்காற்றி ஆற்றல் தன்னிறைவுக்கு வழிவகுத்தார். தேசத்தின் வளர்ச்சிக்காக உண்மையாகப் பாடுபட்ட அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, மே 21-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (21.05.2025 -புதன்கிழமை) மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை லேணா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என்.நேரு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமை வகிக்கிறார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன்,

மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன்,

பி.டி.அரசக்குமார்,, வி.என்.மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி,

கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் தொகுதி பொறுப்பாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆய்வகங்களுடன் கூடிய வகுப்பறை கட்டிடம் மற்றும் ஒப்பனை அறைகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு , கல்லூரி முதல்வர் சிவக்குமார் உள்ளிட்ட பேராசிரியர்கள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் விக்கிரவாண்டி ஒருங்கிணைந்த இளைஞர் அணி அமைப்பாளர் எ.செ.எத்திராசன் அவரது திருவுருவப்படத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஜெ. ஜெயபால், ஒன்றிய குழு தலைவர் சங்கீதா அரசி, ஓம்சிவசக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### கழகத் தொண்டர் அணிச் செயலாளர்

# மாஸ்டர் பெ.சேகர் தாயார் திருமதி மாரி முத்து படத்திறப்பு!

## ஆர்.எஸ்.பாரதி-அன்பகம் கலை—ஆஸ்டின்-தாயகம் கவி- டி.கே.எஸ்.இளங்கோவன் பங்கேற்பு!

சென்னை, மே 21-

தி.மு.க.மாநிலத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகரின் தாயார் திருமதி மாரிமுத்து (வயது 95)(தி.மு.க.மேல்வசலைக் கிராமக் கிளை முன்னாள் அவைத்தலைவர்)

வயது மூப்பின் காரணமாக 12.05.2025 அன்று இயற்கையெய்தினார்.

அம்மையாரின் திரு உருவப் படத்திறப்பு நிகழ்வு இன்று (21.05.2025 - புதன் கிமை)மாலை 6.30 மணியளவில், சென்னை14,இராயப்பேட்டை, இலாயிட்ஸ் காலனி, எஸ்.பி.கியூ.43இல் நடைபெறும்.

தலைமையேற்றுப் படத்தினைத் திறந்து வைப்பவர் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,புகழஞ்சலி செலுத்துபவர்கள்

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம்கலை, கழகத் துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், தாயகம் கவி, கழகச் செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை தென்மேற்கு மாவட்டக்கழகச் செயலாளர் நே.சிற்றரசு, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா,



பூச்சி எஸ்.முருகன், அண்ணா அறிவாலய நிருவாகி ஆர்.பத்ம நாபன், திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏஆர்பி .எம். காமராஜ், தொல்காப்பியர் தமிழ்சங்கத் தலைவர் புலவர் வெற்றியழகன், 120 ஆவது வட்டக்கழகச் செயலாளர் ஐ.சி.எப்.சங்கர், இவர்களுடன் கழக நிருவாகிகள், தொண்டர் அணித்தோழர்கள், உறவினர்கள், நண்பர்கள், தேக்வாண்டோ மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

# தமிழ்நாட்டில் குற்றச் சம்பவங்கள் குறைந்துள்ளன!

## டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தகவல்!

சென்னை, மே.21-

தமிழ்நாட்டில் கொலை வழக்குகள் குறைந்துள்ளதாக டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது; “தமிழ்நாட்டில் காவல்துறை மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால், 2023 ஆம் ஆண்டைவிட 2024 ஆம் ஆண்டில் கொலை, காயம் மற்றும் கலவரங்கள் உள்ளிட்ட மனித உடலுக்கு எதிரான குற்றங்கள்குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன.

2021 மற்றும் அதற்குப் பிறகு, கொலை வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து குறைந்து வருகின்றன, 2024 ஆம் ஆண்டில் மிகக் குறைவாக கொலை வழக்குகள் (1563 வழக்குகள்) பதிவாகியுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில், காவல்துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், கடந்த 6 ஆண்டுகளில் மிகக் குறைந்த கொலை வழக்குகள் பதிவான 2024 ஆம் ஆண்டில், ரவுடி கொலைகளும் குறிப்பிட்ட அளவு குறைந்துள்ளன.

2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) கொலை வழக்குகள் குறைந்து வரும் போக்கின் தொடர்ச்சியாக, முந்தைய ஆண்டின் (2024) முதல் நான்கு மாதங்களில் 501 கொலைகளுடன் ஒப்பிடும்போது, 483 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன.

ரவுடிகள் மற்றும் பிற சமூக விரோத சக்திகளுக்கு எதிரான இந்த முறையான, முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் பழிக்குப்பலி மற்றும் ரவுடி கொலைகளில் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து நல்ல பலனைத் தந்துள்ளன.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெய்வேலி சட்டமன்ற தொகுதி குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியத்தில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டிற்கு 15 மூன்று சக்கர குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு குறிஞ்சிப்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் கலந்து கொண்டு மூன்று சக்கர குப்பைகள் சேகரிக்கும் பேட்டரி வாகனத்தை வழங்கினார். இதில் குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியத்தில் உள்ள வடக்குத்து ஊராட்சிக்கு 13 வாகனங்களும், சமட்டிக்குப்பம் மற்றும் கோரணப்பட்டு ஊராட்சிக்கு தலா ஒரு வாகனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் குணசேகரன், சந்தோஷ் குமார், வீர ராமச்சந்திரன், ஆனந்த ஜோதி, அனுசுயா தேவி, ஆனந்த, கல்யாண சுந்தரம், சுரேஷ், சிவக்குமார், சீத்தாராமன், அறிவழகன் மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மகாராஸ்டிரா +2 பொதுத்தேர்வில்

# அதிக மதிப்பெண் பெற்ற தமிழ் மாணவிக்கு மும்பை தி.மு.க.வினர் பாராட்டு!

மும்பை, மே 21-

கடந்த வாரம் வெளியான 12ம் வகுப்புக்கான பொதுத்தேர்வில் தாராவி கிராஸ்ரோடு பகுதியில் காந்திநகர் எதிரே உள்ள பேரைடைஸ் கட்டிடத்தில் வசித்து வரும் தமிழ் மாணவி செரீனா சாமுவேல் 95% சதவீத மதிப்பெண் பெற்று அசத்தி உள்ளார்.

இவர் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா மீனவன் குளத்தைச் சேர்ந்த சாமுவேல் -மீனா தம்பதியர்களின் இரண்டாவது மகள் ஆவார்.

இவர் சையானில் உள்ள S.I.E.S கல்லூரியில் முதல் மாணவியாக தேர்வு பெற்றுள்ளார்.

இவருக்கு மும்பை திமுக சார்பில் பொறுப்புக் குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் கலைஞர் மாளிகையில் நடந்த பாராட்டு விழாவில் சால்வை அணிவித்து பூங்கொத்து வழங்கி ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

மாணவிக்கு கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலரும் வழங்கப்பட்டது.

மகிழ்ச்சியை கொண்டாடும் வகையில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ,ம. நீநிதுரை,

பகுதி செயலாளர்கள் சேரை.ச.பிரகாஸ், வக்கோலா சேலம் மா.சீனிவாசன், தாராவி ரவிரஜினி மற்றும் கே.ஏ.ஜாகீர் உசைன், க.ராசன்,அன்பில் ரஞ்சன், அசோக்குமார், களந்தை சண்முகவேலு, பிரபு பிலிப், வெங்கடேசன், ஆர்.ரவி,மற்றும் மாணவியின் குடும்பத்தினர் கலந்து கொண்டார்கள்.

வணிகப்பிரிவில் முதல் மாணவியாகவும் அக்கவுண்டென்சி பாடத்தில் 99 மதிப்பெண்களும் ஆங்கிலப் பாடத்தில் 85 மதிப்பெண்களும் பொருளாதாரப் பாடத்தில் 95 மதிப்பெண்களும் வர்த்தக பாடத்தில் 96 மதிப்பெண் களும்,கணிதப் பாடத்தில் 96 மதிப்பெண்களும், ஐடி பாடத்தில் 97 மதிப்பெண்களும் பெற்று தேர்வாகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.டி. சீத்தாபதி
### மே 21 (2019)



கழகம் துவக்கிய காலத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியதோடு, ஒன்றுபட்ட சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும் – பின்னர் தொடர்ந்து இரு முறை மாவட்டச் செயலாளராகவும் – தலைமை நிலைய அலுவலகச் செயலாளராகவும் – சொத்து பாதுகாப்புக்குழு துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகப் பொதுக்கூட்டம் என்றாலும் – ஊர்வலம், பேரணி என்றாலும் – தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டம், ஆர்ப்பாட்டங்களென்றாலும், அப்போது அத்தனை எளிதாக நடத்திட முடியாது. எதிர்ப்பு – கடுமையான ஆயுத வன்முறை போன்றவற்றை முறியடித்து காவல்துறையின் ரகசிய இலாகாவே அஞ்சிடும் வகையில் இவர் திட்டங்கள் வகுத்து அனைத்திலும் வெற்றிகரமான செயல்படுத்தி காட்டியவர் இவர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திரபிரசாத், பிரதமர் நேரு ஆகியோருக்குக் கறுப்புக் கொடி போராட்டம் – விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – கைலாசம் கமிஷனை எதிர்த்து நடைபெற்ற போராட்டம் – இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டம் மற்றும் நெருக்கடிகால மிசா சட்டத்தில், சென்னை மத்திய சிறையிலும் – பாளையங்கோட்டைச் சிறையிலுமாக ஓராண்டு மிசா சிறைவாசம் அனுபவித்தவர்.

2012ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை இரா. லோகநாதன்
### மே 21 (2015)



இளமை பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்ட நகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.